| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| MSSRF Science for Sustainable Development | மாவட்டம் : | **திண்டுக்கல்** | காலம் : | 20/12/2023 | முதல் | 24/12/2023 |
| | அறிக்கை எண் : | 101/ 2023 | வெளியீட்டு நாள் : | | 19/12/2023 | |

### திண்டுக்கல் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 30°- 33° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23° - 25° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (14.12.2023 **முதல்** 18.12.2023) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 24-12-2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14/12 | 15/12 | 16/12 | 17/12 | 18/12 | தேதி | நாள்-1 20/12 | நாள்-2 21/12 | நாள்-3 22/12 | நாள்-4 23/12 | நாள்-5 24/12 |
| 0.0 | 0.0 | 0.0 | 1.4 | 37.4 | மழை (மி.மீ) | 8 | 3 | 3 | 0 | 0 |
| 31 | 33 | 31 | 30 | 30 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 25 | 24 | 23 | 24 | 24 |
| 21 | 24 | 23 | 25 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 23 | 23 | 22 | 23 | 23 |
| 4 | 5 | 6 | 8 | 8 | மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 4 | 7 | 4 | 6 |
| 79 | 67 | 83 | 85 | 95 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 90 | 90 | 90 | 90 | 90 |
| 54 | 70 | 83 | 89 | 90 | | 80 | 70 | 60 | 50 | 70 |
| 15 | 14 | 8 | 8 | 6 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 6 | 6 | 6 | 8 | 8 |
| வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | காற்றின் திசை | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு |

### குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் டிசம்பர் 20 தேதி மிதமான மழையும் மற்றும் 21, 22 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 23°-25° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 22°-23° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 6 முதல் 8 கி.மீ வேகத்தில், வடகிழக்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

### பொது ஆலோசனை:

தொடர்ந்து மேக மூட்டத்துடன் கூடிய ஈரப்பதமான வானிலை நிலவுவதால் விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு 10-15 என்ற எண்ணிக்கையில் மஞ்சள் ஒட்டும்பொறி அட்டைகளை வைத்து சாறு உறிஞ்சும் பூச்சிகளின் நடமாட்டத்தைகண்காணிக்கவும்.

அடுத்த 3 நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் தங்கள் விளை நிலங்களில் முறையான வடிகால் வசதியினை ஏற்படுத்தவும்.

நெல் வயல் மற்றும் இதர விளைநிலங்களில் போதிய வடிகால் வசதியினை ஏற்ப்படுத்தவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : தக்காளி, பருத்தி, கால்நடை.**

**தக்காளி:**
தக்காளி பயிரில் முன்பருவ இலைக்கருகல் நோய் தாக்குதல் பரவலாக தென்படக்கூடும். இது தக்காளியின் எந்த வளர்ச்சி நிலையிலும் தாக்குதலை ஏற்படுத்தும்,

பொதுவாக இலைகளின் மீது ஏற்படும் நோய் ஆகும். பூஞ்சை இலைகளை தாக்கும் பொழுது இலையில் புள்ளிகள் ஏற்பட்டு கருகத் தொடங்கும். இலைக்கருகல் அதிகமாகும் போது வயது முதிர்ந்த இலைகளில் சிறியதாக கருப்பு காயங்களாக காணப்படும். இலையைப் போன்றே தண்டுகளிலும் காயங்கள் ஏற்படுகின்றன. தண்டு வழியாக பழங்களை பாதிக்கிறது. காயங்கள் பொதுவாக பழம் முழுவதிலும் காணப்படுகின்றன.

பயிர் குப்பைகளை அகற்றி, அழிக்க வேண்டும்.

இதனைக் கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீருக்கு 15 மில்லி என்ற அளவில் டைபென்கொனோசோல் என்ற மருந்து கலந்து தெளிக்க வேண்டும்.

பொதுவாக மருந்து தெளிக்கும் வேலைகளை மழை இல்லாத நாட்களில் மேற்கொள்ளவும்

**பருத்தி:**
பருத்தி பயிரில் வளர்ச்சி ஊக்கிகள் தெளித்தல் நல்ல பயனைத் தரும். 40 மில்லி நாப்தலின் அசிட்டிக் அமிலத்தை ஒரு லிட்டர் நீரில் கரைத்தால் 40 பிபிஎம் கரைசல் கிடைக்கும்.

பருத்தி பயிர் மொக்கு விடும் பருவத்தில் நாப்தலின் அசிட்டிலிக் அமிலம் 40 பிபிஎம் கரைசலை தெளிக்க வேண்டும். முதல் முறை தெளித்து ஒரு மாதம் கழித்து இரண்டாவது முறையாக 90ம் நாள் தெளிக்க வேண்டும்.

இவ்வாறு செய்வதால் மொட்டுகள் உதிர்வது குறைக்கப்பட்டு அதிகம் காய்கள் பிடிக்க உதவுகிறது.

பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மழை நின்ற பிறகே தொடங்க வேண்டும்.

**கால்நடை:**
தற்போது நிலவி வரும் குளிர்ந்த வானிலையின் காரணமாக, கால்நடைகளை, சூரியன் உதித்து 2 மணி நேரம் கழித்து மேச்சலுக்கு அனுப்ப வேண்டும்,

மாட்டு கொட்டகைகளை சுற்றி கோணி சாக்கு பை கொண்டு மறைத்து கட்டவும்,

கொட்டகைகளை ஈரப்பதம் இல்லாதது நன்கு உலர்ந்து இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.
மேலும் உலர்ந்த தீவனங்கள் அல்லது பசுந் தீவனங்கள் கொடுக்கும் போது ஈரப்பதம் இல்லாமல் கொடுக்க வேண்டும்.